**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 459/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | கீழக்கலங்கல் | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழக்கலங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மகேஸ்வரி எனது மாமியார். எதிரியை எனக்கு தெரியும். எனது மாமியார் மகேஸ்வரிக்கும், எதிரிக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 02.04.2023 ம் தேதி நான் கீழக்கலங்கலிருந்து ஆழ்வார்க்குறிச்சியில் உள்ள எனது மாமியார் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் எனது மகளுக்கு பிறந்த நாள் என்பதினால் நான் கேக் வாங்க போய் விட்டேன். மதியம் சுமார் 03.00 மணியளவில் எனது மனைவி முத்துகிருஷ்ணவேணி தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்.

அம்மன்கோவில் பக்கம் வைத்து எனது மாமியாரை எதிரி பேச்சிமுத்து அரிவாளால் 03.00 மணியளவில் வெட்டியதாக தகவல் சொன்னார். நான் சம்பவம் கேள்விபட்டு உடனே சம்பவயிடத்திற்கு வந்து எனது மாமியாரை

வந்து பார்த்தபோது எனது மாமியாருக்கு தலையிலும், தோள்பட்டையிலும் வெட்டு பட்டிருந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக காயம்பட்ட எனது மாமியாரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். ஆழ்வார்க்குறிச்சி போலீசார் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் எனது மாமியார் ரேகைகளை வைத்தார். எனது மனைவி முத்துகிருஷ்ணவேணி சாட்சி கையெழுத்து செய்தார். எனது மனைவி, எனது மாமியாரின் காயம்பட்ட இடத்தை துண்டு வைத்து அழுத்தி பிடித்து கொண்டு மருத்துவமனைக்கு வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:43:38 +0530

**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 459/2024**

**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணபதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வள்ளாளர் | தொழில் | : | பூசாரி |
| கிராமம் | : | மேலூர் | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மேலுரில் குடியிருந்து வருகிறேன். நான் மேலூரில் கோவில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மகேஸ்வரி எனது அண்ணன் மகள். எதிரியை எனக்கு தெரியும். எனது அண்ணன் மகள் மகேஸ்வரிக்கும், எதிரிக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 2023ம் வருடம் ஒருநாள் நான் ஆடு மேய்க்க சென்று விட்டேன். மாலை சுமார் 04.00, 04.30 மணியளவில் நான் கோவில் நடையை திறந்தேன்.

அப்போது எனது அண்ணன் மகள் மகேஸ்வரிக்கும், எதிரி பேச்சிமுத்துவிற்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள். அம்மன்கோவிலுக்கு முன்பக்கம் இரத்தமாக கிடந்தது. அதை நான் தண்ணீர் தெளித்து சுத்தப்படுத்தினேன். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:43:48 +0530